# ஆப்பிரிக்கா



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# ஆப்பிரிக்கா

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# ஆப்பிரிக்கா கண்டம்

புவியானது ஏழு கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உலகின் இரண்டாவது மிகப்பெரிய கண்டமாகவும் மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட கண்டமாகவும் ஆப்பிரிக்கா கண்டம் விளங்குகிறது. இது பூமியின் மத்தியப் பகுதியில் அமைந்த நிலப்பரப்பு ஆகும். இக்கண்டத்தில் மொத்தம் 54 நாடுகள் உள்ளன. ஆப்பிரிக்கா கண்டத்தின் தற்போதைய, தோராயமான மொத்த மக்கள் தொகை 1.3 பில்லியன் ஆகும். உலகின் மொத்த மக்கள் தொகையில் தோராயமாக 16.72 % இணையாக ஆப்பிரிக்கா கண்டத்தின் மக்கள் தொகை உள்ளது. ஆப்பிரிக்கா கண்டமானது இருண்ட கண்டம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆப்பிரிக்கா கண்டத்தின் மிகப்பெரிய நாடு அல்ஜீரியா, மிகச்சிறிய நாடு சீஷெல்ஸ் ஆகும்.



அல்ஜீரியா



சீஷெல்ஸ்

ஆப்பிரிக்கா கண்டம் அதிக அளவு நிலப்பரப்பு கொண்ட பகுதியாக உள்ளது. மூன்று கண்டங்களால் சூழப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதியில் அட்லாண்டிக் பெருங்கடல், தெற்குப் பகுதியில் தெற்குப் பெருங்கடல், கிழக்குப் பகுதியில் இந்தியப் பெருங்கடல்களைக் கொண்டுள்ளது. ஆப்பிரிக்கா கண்டமானது ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. அவை கிழக்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, வட ஆப்பிரிக்கா, மத்திய ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்கா.

ஆப்பிரிக்கா கண்டமானது மிக உயரமான மலை, மிகப்பெரிய விலங்கு மற்றும் நீளமான நதி, பாலைவனம் போன்ற ஏராளமான சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.



கிளிமாஞ்சாரோ மலை

ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த மலையாக கிளிமாஞ்சாரோ மலை விளங்குகிறது. இது ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. முதன் முதலாக கிளிமாஞ்சாரோ மலையின் உச்சியை அடைந்து, அதன் உயரத்தைக் கண்டறிந்தவர்கள் ஹான்ஸ் மேயர் மற்றும் லுட்விக் என்பவர்கள் ஆவர்.



ஹான்ஸ் மேயர்



லுட்விக்

கிளிமாஞ்சாரோ மலை தான்சானியா நாட்டின் வடகிழக்குப் பகுதியிலும், கென்யா நாட்டின் எல்லைப் பகுதியிலும் அமைந்துள்ள மிக உயரமான எரிமலை அல்லது சிகரம் ஆகும்.

கிளிமாஞ்சாரோ என்ற சொல்லானது சுவாகிலி மொழியில் இருந்து பெறப்பட்டதாகும். இதில் "கிளிமா" என்பது சிறுமலை அல்லது குன்று என்றும், "ஞ்சாரோ" என்பது வெள்ளை அல்லது பளபளப்பான என்றும் பொருள்படும். இதன் உயரம் கடல் மட்டத்தில் இருந்து 19,340 அடி அதாவது 5,895 மீட்டர் ஆகும். கிளிமாஞ்சாரோ மலையானது மூன்று எரிமலை முகடுகளால் ஆனது. அவை கிபோ, மாவென்சி மற்றும் சிரா ஆகும். மாவென்சி மலையானது ஆப்பிரிக்காவின் மூன்றாவது உயரமான மலையாகக் கருதப்படுகிறது. கிளிமாஞ்சாரோ தேசியப் பூங்கா உள்ளது. கிளிமாஞ்சாரோ மலையானது கிழக்கு ஆப்பிரிக்காவின் சிறப்பம்சமாக உள்ளது.



கிபோ, மாவென்சி மற்றும் சிரா

உலகின் மிகப்பெரிய பாலைவனம் சஹாரா பாலைவனம் ஆகும். இது ஆப்பிரிக்காவின் வட பகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய சுடு பாலைவனம் ஆகும். இதன் மொத்த பரப்பளவு 90 இலட்சம் சதுர கி.மீ ஆகும்.



சஹாரா பாலைவனம்

சஹாரா பாலைவனத்தின் மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடல், வடக்கில் மத்தியத் தரைக்கடல், கிழக்கில் செங்கடல், தெற்கில் சூடான் பகுதிகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. நைகர் நதியும், நைல் நதியும் சஹாராவில் பாயும் வற்றாத நதிகளாகும். இந்தப் பாலைவனத்தில் பகலில் இருக்கும் வெப்பத்திற்கு இணையாக இரவில் அதிக அளவு குளிர் காற்றும், கடுமையான மணல் புயலும் வீசுகிறது.





ஒட்டகங்கள், மான் மற்றும் ஆடுகள், சஹாரா பாலைவனத்தில் அதிகம் வசிக்கும் விலங்குகள் ஆகும். இவை நீர் இல்லாமல் நீண்ட நாள் உயிர் வாழக்கூடிய உடல் தகவமைப்பினைப் பெற்றுள்ளன. நடு சஹாரா பாலைவனம் தாவரங்களைக் கொண்டுள்ள கலப்பு நிலப்பகுதியாக உள்ளது. வடக்கு மற்றும் தெற்குப் பாலைவனப் பகுதிகளானது புதர்கள், உயரமான புல்வெளிகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.



ஒட்டகம்




மான்



ஆடு

உலகின் மிகப்பெரிய நதியாக நைல் நதி விளங்குகிறது. இந்த நதியானது தான்சானியா, ருவாண்டா, சூடான் மற்றும் எகிப்து போன்ற நாடுகள் வழியாகப் பாய்கிறது. நைல் நதியானது வெள்ளை நைல் மற்றும் நீல நைல் என இரு பெரும் துணை ஆறுகளைக் கொண்டுள்ளது. நைல் நதியானது 6650 கி.மீ நீளம் உடையது. வெள்ளை நைல் நதி அதிக நீளம் உடையதாகும். இது மத்திய ஆப்பிரிக்காவின் விக்டோரியா ஏரியில் இருந்து உருவானதாகும். நீல நைல் நதியானது எத்தியோப்பியாவில் உள்ள டானா ஏரியில் இருந்து உருவானதாகும்.




நைல் நதி வரைபடம்

அத்பரா ஆறு நைல் நதியின் மற்றொரு துணை ஆறுகளில் ஒன்றாக இருக்கிறது. இது மழைக் காலத்தில் நீரோட்டத்துடனும், கோடை காலத்தில் வற்றியும் காணப்படும். வட ஆப்பிரிக்காவின் புனித நதியாக நைல் நதி சிறந்து விளங்குகிறது. நைல் நதியானது தெற்கில் உற்பத்தியாகி வடக்கு நோக்கிப் பாய்கிறது.



நைல் நதி

ஆப்பிரிக்காவில் உள்ள மிகப்பெரிய ஏரிகளில் ஒன்று விக்டோரியா ஏரியாகும். இது விக்டோரியா நியான்சா என்று அழைக்கப்படுகிறது. விக்டோரியா ஏரியின் மொத்தப் பரப்பு 68,800 சதுர கி.மீ. உலகின் இரண்டாவது பெரிய நன்னீர் ஏரியாக விக்டோரியா ஏரி உள்ளது. இதன் அதிகபட்ச ஆழம் 84 மீ மற்றும் சராசரி ஆழம் 40 மீ. நைல் நதியின் முக்கிய நீர் ஆதாரமாக விக்டோரியா ஏரி விளங்குகிறது. விக்டோரியா ஏரியானது கென்யா, உகாண்டா மற்றும் தான்சானியா ஆகிய மூன்று நாடுகளால் பிரிக்கப்பட்டு உள்ளது.



விக்டோரியா ஏரி

ஆப்பிரிக்காவில் உள்ள நீர் வீழ்ச்சிகளில் மிகப் பெரியது விக்டோரியா நீர்வீழ்ச்சி ஆகும். ஜிம்பாப்வே மற்றும் சாம்பியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான எல்லையில் விக்டோரியா நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. இது சாம்பசி ஆற்றின் நடுவில் காணப்படும் ஒரு

அழகிய கண்கவர் நீர்வீழ்ச்சியாகும். இந்த அருவியானது 1.7 கி.மீ அகலமும், 128 மீட்டர் உயரமும் கொண்டது. விக்டோரியா நீர் வீழ்ச்சியானது விக்டோரியா அருவி என்றும் அழைக்கப்படுகிறது.

ஆப்பிரிக்காவில் வாழும் மிகப்பெரிய பாலூட்டி விலங்கு யானை ஆகும். யானைகளின் சிறப்பு அதன் "தும்பிக்கை". ஆப்பிரிக்க யானைகள் இரண்டு வகைகளாக உள்ளன. அவை ஆப்பிரிக்கப் புதர் யானை மற்றும் ஆப்பிரிக்க வன அல்லது காட்டு யானை. ஆசியக் கண்டத்தில் வாழும் யானைகளை ஒப்பிடும் போது ஆப்பிரிக்க யானைகள் உயரத்திலும் எடையிலும் அதிகமாக உள்ளன. உடலில் உள்ள வெப்பத்தை வெளிப்படுத்துவதற்கான உறுப்பாக காதுகள் பயன்படுகின்றன. ஆப்பிரிக்க யானையின் தந்தங்கள் உறுதியாகவும், நீளமாகவும் இருக்கும். ஆப்பிரிக்கப் புதர் யானையின் தந்தங்கள் வெளிப்புறமாகவும், ஆப்பிரிக்க வன யானைகளின் தந்தங்கள் நேராக,



ஆப்பிரிக்க யானை



ஆசிய யானை

கீழ்நோக்கி வளைந்திருக்கும்.

ஆப்பிரிக்காவில் வாழும் மிக உயரமான பாலூட்டி விலங்கு ஒட்டகச் சிவிங்கி ஆகும். ஒட்டகச் சிவிங்கியின் சிறப்பு அம்சமே அதன் நீண்ட கழுத்து ஆகும். இதன் கழுத்தானது தோராயமாக 6 அடி (1.5 முதல் 1.8 மீட்டர் ) மற்றும் அதற்கும் அதிகமான நீளம் கொண்டதாக உள்ளது. இதன் உயரம் அதிகபட்சமாக 16 அடி முதல் 18 அடி ( 4.5 மீ முதல் 5.5 மீ ) வரை இருக்கும்.. இதன் **நாக்கு கருநீல நிறத்தில்** இருக்கும். உலகிலேயே அதிக எடை கொண்ட இதயத்தை ( 10 முதல் 11கிலோ ) ஒட்டகச் சிவிங்கி பெற்றிருக்கிறது.







வரிக்குதிரைகள். ஆப்பிரிக்கா நாட்டில் அதிக அளவில் காணப்படுகின்றன. வரிக்குதிரைகள் நின்று கொண்டே தூங்கும் திறன் கொண்டவை. இவை எப்பொழுதும் கூட்டமாக வாழ்கின்றன. ஒவ்வொரு வரிக்குதிரையும் உடல் முழுவதும் **கருப்பு மற்றும் வெள்ளையிலான கோடுகளைக்** கொண்டுள்ளன. வரிக்குதிரைகளின் வரிகள் தனித்தன்மை பெற்றவை. நன்கு வளர்ந்த வரிக்குதிரைகள் 2 முதல் 3

மீட்டர் நீளமும், 1 முதல் 2 மீட்டர் உயரமும் கொண்டுள்ளது.

உலகில் வாழும் மிகப்பெரிய பறவைகளுள் ஒன்று தீக்கோழி. இது பறவை இனங்களிலேயே மிகப்பெரிய மற்றும் உயரமான, அதிக எடை கொண்ட பறவையாகக் காட்சி அளிக்கிறது. தீக்கோழி ஒரு பறக்க முடியாத பறவை ஆகும். மணிக்கு அதிகபட்சமாக 70 கி.மீ வேகத்தில் ஓடும் தன்மை உடையது. இதற்குப் பற்கள் கிடையாது.





நெருப்புக்கோழியானது மிக நீண்ட கழுத்து மற்றும் கால்களைக் கொண்டுள்ளது. இது நெருப்புக்கோழி என்றும் அழைக்கப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய கால்வாய்களில் ஒன்று சூயஸ் கால்வாய். இது எகிப்தில் உள்ள சூயஸ் நகரின் நடுவே அமைந்துள்ளது. மத்திய தரைக்கடலையும், இந்தியப் பெருங்கடலையும் இணைக்கிறது. இக்கால்வாய் 1869 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இது 163 கி.மீ நீளமும், 300 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது.

சூயஸ் கால்வாயானது சரக்குக் கப்பல் செல்லும் முக்கியப் பாதையாக உள்ளது. ஏனெனில் குறைந்த நேரத்தில் அதிக விரைவாகச் செல்ல முடியும்.



சூயஸ் கால்வாய்




சூயஸ் கால்வாய் வரைபடம்

ஆப்பிரிக்கா, மனித குலம் மற்றும் மனித நாகரிகத்தின் மூதாதையர் இல்லமாகக் கருதப்படுகிறது. இங்கு ஆப்பிரிக்காவைப் பூர்விகமாக கொண்ட இனக்குழு மக்களும் இந்தோ ஐரோப்பிய இன மக்களும் வாழ்கின்றனர். ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கென ஒரு தனித்தன்மை வாய்ந்த பண்பாடு மற்றும் மொழியைக் கொண்டுள்ளனர்.





ஆப்பிரிக்க இன மக்கள்

ஆப்பிரிக்க கண்டத்தின் ஐந்து பகுதிகளின் நிலப்பரப்பு, மக்கள் தொகை, மொழிகள், மொத்த நாடுகள் ஆகியவை கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| ஆப்பிரிக்கா கண்டத்தின் பகுதிகள் | நிலப்பரப்பு | மக்கள் தொகை | மொழிகள் | மொத்த நாடுகள் |
|---|---|---|---|---|
| கிழக்கு ஆப்பிரிக்கா | 25 இலட்சம் சதுர மைல் | 5.7% | சுவாகிலி, ஆங்கிலம் | 19 |
| மேற்கு ஆப்பிரிக்கா | 23 இலட்சம் சதுர மைல் | 5.1% | யோருபா, பிரெஞ்சு | 16 |
| வட ஆப்பிரிக்கா | 29 இலட்சம் சதுர மைல் | 3.1% | அரேபிக், இக்போ | 7 |
| தென் ஆப்பிரிக்கா | 10 இலட்சம் சதுர மைல் | 0.8% | ஜுலு, ஆங்கிலம் | 5 |
| மத்திய ஆப்பிரிக்கா | 25 இலட்சம் சதுர மைல் | 2.3% | அரேபிக், பிரெஞ்சு, போர்த்துகீசு | 7 |

# நாடுகளும் அதன் தலைநகரமும்

| ஆப்பிரிக்க நாடுகள் | கொடி | தலைநகரம் | நாணயம் |
|---|---|---|---|
| புருண்டி |  | புஜீம்பரா | புருண்டி பிராங்க் |
| கொமோராசு |  | மொரோனி | கொமொரிய பிராங்க் |
| சிபூட்டி |  | சிபூட்டி | சிபூட்டியன் பிராங்க் |
| எரித்ரியா |  | அஸ்மாரா | நக்பா |
| எத்தியோப்பியா |  | அடிஸ் அபாபா | எத்தியோப்பியா பிர் |
| கென்யா |  | நைரோபி | கென்ய சில்லிங் |
| மடகாசுகர் |  | அண்டனானரீவோ | மலகசி அரியரி |
| மலாவி |  | லிலாவ்ங்வே | மலாவிய க்வாச்சா |
| மொரீசியஸ் |  | லூயி துறை | மொரீசிய ரூபாய் |
| மயோட்டே |  | மமுட்சு | யூரோ |
| மொசாம்பிக் |  | மபுட்டோ | மொசாம்பிக் மெட்டிகல் |

| ஆப்பிரிக்க நாடுகள் | கொடி | தலைநகரம் | நாணயம் |
|---|---|---|---|
| ரீயூனியன் |  | தூய தொனி | யூரோ |
| ருவாண்டா |  | கிகாலி | ருவாண்ட பிராங்க் |
| சீஷெல்ஸ் |  | விக்டோரியா | சீஷெல்சின் ரூபாய் |
| சோமாலியா |  | மொகடீசு | சோமாலி சில்லிங் |
| தான்சானியா |  | டொடோமா | தான்சானியா சில்லிங் |
| உகாண்டா |  | கம்பாலா | உகாண்டா சில்லிங் |
| ஜாம்பியா |  | லுசாக்கா | ஜாம்பிய க்வாச்சா |
| சிம்பாப்வே |  | அராரே | சிம்பாப்வியா டாலர் |
| அங்கோலா |  | லுவாண்டா | க்வான்சா |
| காமரூன் |  | யாவுண்டே | மத்திய ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| மத்திய ஆப்பிரிக்க்க குடியரசு |  | பங்கி | மத்திய ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |

| ஆப்பிரிக்க நாடுகள் | கொடி | தலைநகரம் | நாணயம் |
|---|---|---|---|
| சாட் |  | ந்ஜமேனா | மத்திய ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| காங்கோ குடியரசு |  | பிரசாவில் | மத்திய ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| கேபோன் |  | லிப்ரவில் | மத்திய ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| சாவோ டோமே பிரின்சிபே |  | சாவோ டோம் | சாவோ டோமே மற்றும் பிரின்சிபே |
| அல்ஜீரியா |  | அல்ஜிரியஸ் | அல்ஜிரிய தினார் |
| எகிப்து |  | கெய்ரோ | எகிப்தியா பவுண்ட் |
| லிபியா |  | திரிப்பொலி | லிப்யா தினார் |
| மொராக்கோ |  | ரோபாட் | மொராக்கிய திர்கம் |
| சூடான் |  | கார்ட்டும் | சூடானிய பவுண்ட் |
| துனிசியா |  | துனிஸ் | துனீசு தினார் |
| மேற்கு சகாரா |  | அல்உயூன் | மொராக்கோ திர்கம் |

| ஆப்பிரிக்க நாடுகள் | கொடி | தலைநகரம் | நாணயம் |
|---|---|---|---|
| போட்ஸ்வானா |  | காபரோனி | புலா |
| லெசோத்தோ |  | மசெரு | லோட்டி |
| நமீபியா |  | விந்தோக் | நமீபியன் டாலர் |
| தென்னாப்பிரிக்கா |  | கேப் டவுன் | தென்னாப்பிரிக்க ராண்ட் |
| சுவாசிலாந்து |  | ம்பாபேன் | லீலாங்கினி |
| பெனின் |  | நோவோ | மேற்கு ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| புர்கினா பாசோ |  | உகாடுகு | மேற்கு ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| காம்பியா |  | பன்ஜுல் | தலாசா |
| கானா |  | அக்ரா | கானாவின் செடி |
| கேப் வேர்ட் |  | பிரைய்யா | கேப் வேர்டின் எசுகுடோ |
| கினி |  | கொனாக்ரி | கினியின் பிராங்க் |

| ஆப்பிரிக்க நாடுகள் | கொடி | தலைநகரம் | நாணயம் |
| --- | --- | --- | --- |
| கினி-பிசாவு |  | பிசாவு | மேற்கு ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| லைபீரியா |  | மொன்ரோவியா | லைபீரிய டாலர் |
| மாலி |  | பமாக்கோ | மேற்கு ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| மவுரித்தானியா |  | நவாக்சோட் | மவுரித்தானியா ஔகியா |
| நைஜர் |  | நியாமி | மேற்கு ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| நைஜீரியா |  | அபூஜா | நைஜீரிய நைரா |
| செயிண்ட் எலனா |  | ஜேம்ஸ்டவுன் | செயிண்ட் எலனா பவுண்ட் |
| செனகல் |  | டக்கார் | மேற்கு ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |
| சியொரா லியொன் |  | ப்ரீடௌன் | லியொன் |
| டோகோ |  | லோமே | மேற்கு ஆப்பிரிக்கா சிஎப் எ பிராங்க் |



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com